
# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!


SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

ஓலை - 1 | மார்கழி 2016 | தோரணம் - 11


## MAN IS AN EXPRESSION OF GOD
## AND THE GOD IS THE REALITY OF MAN!


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர்

வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்



## 04-12-2016 யோகா நிலையத்தில் நடைபெற்ற பஜனையின் சில பகுதிகள்

சைவ முன்னேற்றச்சங்கத்தில் இயங்கிவரும் யோகா நிலையத்தினரால் சுவாமி பாபாஜி அவர்களின் பிறந்த தினம் 04-12-2016ம் திகதியன்று அனுஷ்டிக்கப்பட்டது. காலை 9.00மணிக்கு ஆரம்பமான பூசை, பஜனைகள் மதியம் வரை நடைபெற்றது. சுவாமி சுந்தர் அவர்கள் முன்னின்று நடத்தினார்கள். பஜனையின் சில பகுதிகளை அருகில் உள்ள U-tube ஐ அழுத்துவதன் மூலம் பார்க்கலாம்

## மனிதநேயப்பணிகளின் தொகுப்பு

அதனைத் தொடர்ந்து யோகா நிலைத்தினர் தமது அறிவொளி வளையம் ஊடாக நடத்திவரும் மனிதநேயப்பணிகள் தொடர்பான ஒலி, ஒளிப்படங்கள் சபை நிறைந்த மக்களுக்கு விளக்கமான உரைகள் மூலம் காட்டப்பட்டது. இதனை அருகில் உள்ள U-tube ஐ அழுத்துவதன் மூலம் பார்க்கலாம்

# யோக வாழ்வு

(லண்டன் அம்பி)

**வா**ழ்வின் வளம் பெருக்க விளைந்தேன்
**வா**ழ்வுதான் யோகம் என்றார் ***சற்குரு ஜக்கி வாசுதேவ்***

**யோ**கம் அறிய முயன்றேன் – ஆனால்
யோகியோ யாண்டும் காண்பதுதான் யோகம் என்றார்

சொன்னது புரிதிலேன் புவியில் அலைந்தேன்
இன்னது தெரிதல் வேண்டி தவித்தேன்

பன்முறை பயிற்சித்தேன் ***மாமுத்திரை சாம்பவி***யை
என்னளவில் எளிதான வழியினிலே - கிடைத்தது படைத்தோன் பரிசு

நடைமுறையில் கண்டேன் கருத்துமிகு பயன்கள் பல
தொடர்ந்தேன் தொன்மைமிகு பன்முக பயிற்சியாம்

இடறேதுமற்ற இலகுவான சில சாதனாக்க
தடையின்றித் தொடர்ந்தேன் ***ஹடயோக***ப் பயிற்சியினை

***சூர்யக்ரியா***வுடன் ***சூர்யசக்தி*** சேர்த்து இலகுவாகக் கற்றேன் -
மார்க்கங்களில் மகத்தானது இதுவன்றோ என்றார் சற்குரு

***சக்தி சலனக்கிரியா***வையும் பக்தியுடன் பயின்றேன்
முக்தி எய்த இதுவன்றோ துவக்கம் எனத் துலங்கியது

***பாவசஸ்பந்தன***மும் பரவசமாக பரிந்துரைத்தனர் - ஆவலுடன்
அனுபவித்தேன் இவ்வுலகவாழ்வின் அக்கரையினை

மாறியதே செறிவுடன் சீர்மிகு பாரினில் இந்த வாழ்வு -
கூறுகின்றேன் உறுதியாக உங்களுக்கும் இது உகந்ததுதான்

***தியானங்க***ளுடன் தொகுத்து வகுத்திடுவீர் வாழ்வினை – ஊனுடல்
மயானம் சென்றிடினும் தயாளனது தாழ் கிட்டிடும் - இது திண்ணம்

**"Practice meditation. You'll find that you are carrying within your heart a portable paradise"**

**-Paramahansa Yogananda**

"Healthy plants and trees yields abundant flowers and fruits. Similarly , from a healthy person, smile and happinss shines forth like the rays of sun ".

- B.K.S.Iyenkar


# பெரிய புராணம் (சொற்பொழிவுகள்)

*சைவ முன்னேற்றச் சங்கம் கடந்த 05-06-2016 அன்று தொடக்கம் எமது அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேதர சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமை தோறும் மாலை 8.00 மணியளவில் நடைபெறும் பெரியபுராணச் சொற்பொழிவுகளை (ஒளிப்பதிவு செய்யப்பட்ட) இந்த இதழ்மூலம் தொடர்ந்து வாசகர்கள் கேட்டு அறிவதற்கு தர இருக்கிறோம். கீழேயுள்ள ரு-வரடிந ஐ அழுத்துவதன்மூலம் கேட்கலாம்*



திருநீலநக்க நாயனார் சரித்திரம்

உரை திரு. ஆனந்த தியாகர் அவர்கள்



நமிநந்தி அடிகள்

உரை திரு. மா. இந்துசேகரன் அவர்கள்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

Saiva Munnetta Sangam (UK)

"Community Service Through Saiva (Hindu) Concern" Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 561805

www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

Registered Charity No: 292085


## எமது சேவைகள்

அருள்மிகு சிதம்பரேஸ்வர் ஆலயம்

கலசம் காலாண்டிதழ்

தோரணம் மாதாந்த மின்னிதழ்

நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் முத்தோர் நியைம்

யோகா நிலையம்

சைவ சமயப்பரீட்சைகள்

கலை வகுப்புகள்

நால்வர் கோட்டம்

இறுதிக் கிரியைகள்

**பக்தியைப் பற்றிக் கொள். சலனமின்றி இரு**


**இதையும் அதையும் எண்ணி மனதைச்**

**சஞ்சலப்படுத்தாதே!**

சங்க ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரியபுராணசொற்பொழிவுகளில் பங்குபற்றியோரில் சிலர்.








True Happiness

*“The great secret of true success, of true happiness, is this: the man or woman who asks for no return, the perfectly unselfish person, is the most successful.”*

# சைவம் வளர ஓர் சரணாலயம்

-பத்மா குகதாசன

**சை**வம் வளர ஓர சங்கம் அமைந்தது
சளைக்காமல் உழைத்தோர் சஞ்சலம் நீங்கினர்
ஆரம்பத்தில் அமர சரியான இடமில்லை
அன்பிதயங்கள் அகங்களிலே ஆரம்பமாகியது சங்கம்

**வா**ரத்தில் ஓரிடம் வசதியாக அமைர்ந்திருந்தும்
அதன் வளர்ச்சி வளரவில்லை நினைத்தபடி
எதிர்நீச்சல் போட்டோர் எண்ணற்றோர்
நீண்டநாள் போராட்டம் நீ அமர இடமில்லை

**தா**யாக தாயகத்தில் தழைத்து நின்ற அடித்தளம்
சேயாக உருவெடுத்தது மனோ பார்க்கில்
சான்றோர் பெரியோர் சத்தியசீலர்கள் சன்மார்க்க
நேறியாளர்
உன் வளர்ச்சியில் கண்வைத்து ஓயாது உழைத்திட ஓங்கி வளர்ந்தது உன் பெருமை

**தா**யகத்து மக்களின் தணியாத தவிப்பிற்கு
தன்னால் இயன்றதை தந்துதவி செய்கின்றாய்
நினையாத நேரத்தில் நிமிர்ந்துவிட்டாய் நீ
நற்பணிகள் பல செய்து நன்னிலை நீயடைந்தாய்
தரணியெங்கும் தன்னார்வ நிறுவனங்கள்
தமிழ் நெஞ்சங்களிலே நின் துதிபாடும் சந்தங்கள்!

**பு**லம்பெயர் தமிழரின் கலாச்சாரம் காத்திட
கலைத்தாகம் இனங்கண்டு கலைவகுப்புகள்தான் நடத்தி
சைவமும் தமிழும் சமமாக நிலைகொள்ள
சிறார்களின் சமய அறிவு சீரோங்கித் தழைத்திட
சிறியோர் பெரியோர் முதியோர் எல்லார்க்கும்
யோகர வகுப்பிருக்க என்னே! உன் பெருமை!
எடுத்துரைக்க வார்த்தையில்லை!

**மு**தன் முறையாக முதியோர்க்கு ஒரு
நிகழ்ச்சி
முக்கனிச் சாற்றினிலே தோய்ந்தெடுத்ததோர் பொன்மாலை நிகழ்வாம்
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமென
அசத்திவிட்டாய் அப்பப்பா!
இனிவருமாண்டெல்லாம் இனிதாக இது நிகழ
எல்லோரின் நல்வாழ்த்தும் நம் இதயவாயிலாக!

**வா**ரத்தில் முதல் திங்கள் வரும்வரை பார்த்திருந்து
சங்கத்தில் ஒன்றுகூடி சரிசமமாய் எல்லோரும்
தேவாரம் திருமுறைகள் தேனமுதாய் நாம் பாடி
அன்புடன் அனைவரும் அறுசுவை உணவுண்டு
அகமகிழ்ந்து செல்வதில் ஆனந்த மடைகின்றாய்!

**சி**ந்தை குளிர்ந்து வழிபட அருகினிலே சிதம்பரேஸ்வரர்
சிவபக்தர் வருகையிலே வழிபாடு தினம் இருதடவை
சிவனருளால் சிறந்தோங்கி ஆலயம் சிறப்படைய
அனுதினமும் அன்பர்களை அணுகி நிற்கின்றோம்!

**மு**ப்தொன்பதை எட்டிவிட்டாய் மூப்பில்லை உனக்கு!
முதியோர் நெஞ்சங்களில் நீக்கமற
நிறைந்துவிட்டாய்!
இன்னும் நீ வளர இயன்ற உதவி நாமளிப்போம்!
ஏணியாய் நாமிருப்போம் எட்டா உயரத்தை நீயடைய!
எம் நெஞ்சத்து வா்த்ததுக்கள் என்றென்றும் உனக்குண்டு!

# நாளைய கனவை நனவாக்கும் நாற்பது

The best preparation for tomorrow is doing our best today

## 1977 - 2017



அன்புடையீர் வணக்கம்,

சங்கம் தனது நிறைவான சேவையில் நாற்பது ஆண்டுகளை எட்டியுள்ளது. இறையருளாலும் உங்களது ஆதரவாலும் தொடரும் எங்கள் பணிகள் மேலும் சிறக்க நீங்கள் துணையிருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த வளர்ச்சி எங்களை எமது பணிகளின் எல்லாத்துறைகளிலும் மேன்மேலும் ஆர்வத்துடன் ஈடுபட ஓர் உந்துசக்தியாகவும் அமைகிறது. நாற்பது ஆண்டுகளின் நிறைவை பலவழிகளிம் சிறப்பிக்க எண்ணியுள்ளோம்.

இதன் ஒரு அங்கமாக இலங்கையில் வறுமையின் காரணமாகத் திருமண வயதை அடைந்தும் மணவாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் திண்டாடும் நாற்பது மணமக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பாரிய திட்டத்தை நாம் மேற்கொள்கிறோம். இந்த மனிதநேயமிக்க பணியில் நீங்களும் இணைந்து நாற்பது திருமணங்களை நடத்தி அவர்களின் குடும்ப வாழ்வை ஆரம்பித்து வைக்க நல்லதொரு துணைசெய்து கொடுக்க வாருங்களென அன்புடன் அழைக்கின்றோம்.

## திருமணச் செலவு

| | | |
|---|---|---|
| தாலி அரைப் பவுண் | – ரூபா | 25,000.00 |
| கூறைச்சேலை | – ரூபா | 10,000.00 |
| பட்டுவேட்டி சால்வை | – ரூபா | 5,000.00 |
| எழுத்து மோதிரங்கள்(2) | – ரூபா | 30,000.00 |
| திருமணச் செலவுக்கு | – ரூபா | 10,000.00 |
| வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கு | – ரூபா | 15,000.00 |
| **மொத்தச் செலவு** | ரூபா | **95,000.00** |

தொடர்புகளுக்கு: வாமனானந்தன் 07958 142288 இந்துசேகரன் 07872 144794

நிரஞ்சன் 07876 404354

# ஆலய சங்க நிகழ்வுகள்

## கார்த்திகை மாதம் 2016

| | | |
|---|---|---|
| 01-01-2017 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டுப் பிறப்பு |
| 02-01-2017 | திங்கள் | திருவெம்பாவை விரத ஆரம்பம் |
| 03-01-2017 | செவ்வாய் | விநாயகர் விரதம் நிறைவு |
| 11-01-2017 | புதன் | திருவாதிரை ஆருத்ரா தரிசனம் |
| | | திருவெம்பாவை நிறைவு |
| 14-01-2017 | சனி | தைப்பொங்கல் |
| 27-01-2017 | வெள்ளி | தை அமாவாசை விரதம் |
| 29-01-2017 | ஞாயிறு | ஏகாதச ஶ்ரீ ருத்ர பாராயணம் |



## 40ஆவது மகாசபைக் கூட்டம்

சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40ஆவது மகாசபைக் கூட்டம் 26-11-2016 அன்று பிப் 1.00 மணியளவில் திரு. ஆனந்ததியாகர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

40ஆவது ஆண்டுக்கான தெரிவுசெய்யபட்ட ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு

தலைவர்: திரு ச.ஆனந்ததியாகர்,

உபதலைவர்: திரு. த. ரவீந்திரமோகன

பொதுச்செயலாளர்: திரு. மா. இந்துசேகரன்,

பொருளாளர்: திரு. சோ. நிரஞ்சன்,

உதவிச் செயலாளர்: திரு. சு. .பாலசிங்கம்,

உதவிப்பொருளாளர்: திருமதி காந்திமதி சூரியகுமார்,

காப்பாளர்கள்:

திரு.கு.சிதம்பரப்பிள்ளை, திரு.வ.இ.இராமனாதன். திரு..ச. தம்பு. வி..நாகரட்ணம் ஆகியோரும்,

சமூகச்செயலாளர்: திருமதி. சரோஜா கனகசபேசன்..

சமயச்செயலாளர்: திரு. ச.குகராஜா.

பாடசாலைச்செயலாளர்: திருமதி சக்தி ஆதீசன்,

கட்டிடச்செயலாளார்: திரு.கு.பரமேஸ்வரன்,

பரீட்சைச்செயலாளர்: வே.ஜெகேந்திரபோஸ்,

வெளிநாட்டுத்துறைச்செயலாளர்: திரு. வி. செ.வாமனானந்தன்,


வெளியீட்டுத்துறைச்செயலாளர்: திரு. வை.சிவனருட்செல்வன் ஆகியோரும்,

அங்கத்துவச் செயலாளர்: திரு. ரத்தினராசா

ஆட்சிக்குழு உறுப்பினர்களாக

திருமதி. விஜி கனகேந்திரன், திருமதி வசந்தா மகாதேவன், திருமதி சரோஜினி வேணுகோபாலன். திருமதி. அருளாம்பிகை குணராசா, திரு வ.இ.லோகநாதன், திருமதி பு.சபாரட்னம், திரு. மா.ரவீந்திரதாஸ்அவர்களும். தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள்.

## யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் - 2017



யோகர் சுவாமிகளின் பிறந்த தின நட்சத்திரமான ஆயிலியம் பின்வரும் மாதாந்த தினங்களில் எமது ஆலயத்தில் அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் எஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்குன்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

14-01-2017 - சனி ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு

11-02-2017 - சனி ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு

10-03-2017 - வெள்ளி ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு

06-04-2017 - வியாழன் ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு

## *பெரியபுராணத் தொடர் விரிவுரை*

*சைவ முன்னேற்றச் சங்கம் கடந்த 05-06-2016 அன்று தொடக்கம் எமது அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேதர சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமை தோறும் மாலை 8.00 மணியளவில் நடைபெறும் பெரியபுராண் சொற்பொழிவுகளை (ஒளிப்பதிவு செய்யப்பட்ட) இந்த இதழ்மூலம் தொடர்ந்து வாசகர்கள் கேட்டு அறிவதற்கு தர இருக்கிறோம்.*

| | | |
|---|---|---|
| 09-12-2016<br>வெள்ளிக்கிழமை | திருமூல நாயனார்<br>திருமந்திரமாலை தந்த சிவயோகியாரின் சீலம் | திரு.<br>சூ.யோ.பற்றிமாகரன் |
| 16-12-2016<br>வெள்ளிக்கிழமை | தண்டியடிகள் நாயனார்<br>புறத்தே கண்ணொளி இன்றித் திருக்குளத்தே திருப்பணி செய்த செம்மை | திரு.<br>க. சிவகுருநாதபிள்ளை |
| 23-12-2016<br>வெள்ளிக்கிழமை | மூர்க்க நாயனார்<br>அடியார்க்கு அமுதிட்டு நற்சூதர் என்று நிலவியவர் மகிமை | திரு.<br>கந்தையா கேதீஸ்வரன் |

**எல்லா மனிதருக்கும் ஒரு பலவீனம் உண்டு. ஒன்றுபேச வேண்டிய சமயத்தில் பேசாமல் இருப்பது!**

**மற்றொன்று மௌனமாக இருக்க வேண்டிய தருணத்தில் பேசுவது!**

மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம் 14-12-2016



திருமதி சரஸ்வதி ஆறுமுகம் காலமானார். அன்னார் இளைப்பாறிய யாழ். இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை ஆசிரியராக 40 ஆண்டுகள் பணியாற்றிய பெருமைக்குரியவர். அன்னார் தனது 90ஆவது வயதில் நல்லூரில் காலமானார். அன்னார் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் யாழ் இந்துக் கல்லூரி குரளைசாரணீய ஆசிரியராக விளங்கியவர். இவர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த சேர் வில்லியம் கோபல்லாவையிடமிருந்து சாரணிய விருதை தமது கல்லூரி பெறுவதற்கு முக்கிய காரணியாக விளங்கியவர். 1970 களில் இலங்கை தமிழாசிரியர் சங்கத்தில் நிரவாகசபையில் உறுப்பினராக பணியாற்றியவர்.

அன்னார் காலஞ்சென்ற சைவசீலர் ஆறுமுகம் ஆசிரியரின் பாரியாரும் ஆவர்.
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய தலைவரும், சிவபூமி உட்பட பல ஆன்மிக தொண்டு புரிகின்ற திரு. ஆறுதிருமுருகன் அவர்களுடைய அன்புத் தாயாரும் ஆவார்
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய சைவ முன்னேற்றச் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


திருவாசகம்

**யானேதும் பிறப்பஞ்சே**
**னிறப்பதனுக் கெனகடவேன்**
**வானேயும் பெறில்வேண்டேன்**
**மண்ணாள்வான் மதித்துமிரேன்**
**றேனேயு மலர்க்கொன்றைச்**
**சிவனே யெம்பெருமானெம்**
**மானேயுன் னருள்பெறுநா**
**ளென்றென்றே வருந்துவனே**

சங்கத்தின் ரூபா 6.00.000/–நிதியுதவியுடன் சைவச்சிறார்களுக்கு நிந்தாவூரில் ஆரமபித்து வைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை –2016






அறவழி வாழ்ந்து

அன்பைப் பெருக்குவோம்